Registered as a Newspaper




# உதயன்

விலை ரூ 2/-

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ கார்த்திகை மீ 20 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 24 ( 05 - 12 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 8




### நகரில் கிடந்த சடலம்

ஆஸ்பத்திரி வீதியில் நேற்றுக்காலை சூட்டுக்காயத்துடன் கிடக்கக் காணப்பட்ட இளைஞரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இந்த இளைஞரின் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. (ஓ-10)

**சாவகச்சேரியில்**

சாவகச்சேரி, சங்கத்தானை - கண்டி வீதியில் இளைஞர் ஒருவரின் சடலம் சூட்டுக்காயங்களுடன் நேற்றுக்காலை காணப்பட்டது.

## 20 ஆம் திகதி என்று ஜே. ஆர். அறிவித்துள்ள போதிலும்

# ஜனாதிபதித்தேர்தலை பொறுத்தே நாடாளுமன்றம் கலைக்கப்படும்!

### அரச வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, டிசம்பர் 5

நாடாளுமன்றம் எதிர்வரும் 20 ஆம் திகதி கலைக்கப்படும் என ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பகிரங்கமாக அறிவித்திருக்கின்ற போதிலும்—

அதற்கு முதல் நாள் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் குழப்பம் ஏதுமின்றி, திட்டமிட்டபடி சுயாதீனமாக நடைபெற்றால் மட்டுமே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி அந்தத்திகதியில் கலைப்பார்.

அதற்கு மாறாக, தேர்தல் குழம்பினால் நாடாளுமன்றம் திட்டமிட்டபடி கலைக்கப்படமாட்டாது. அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் சுயாதீனமாக, குழப்பமின்றி நடைபெற்றிருப்பதாக தமக்கு திருப்தி ஏற்பட்டால், ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன, அத் தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு முன்னரே நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவார் என்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜனாதிபதித்தேர்தலைக் குழப்புவதற்குத் தென் பகுதித் தீவிரவாத இயக்கமான ஜே.வி.பி முழு முயற்சி எடுத்து வருகிறது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலும்குழம்பி, நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டு விட்டால் நாட்டின் அடுத்த தலைவர் யார் என்பதைத் தீர்மானிப்பதிலும் —

சட்டம் இயற்றும் துறை, நிறைவேற்று அதிகாரத்துறை ஆகியவற்றைக் கொண்டுநடத்துவதிலும் பெரும் சிக்கல் ஏற்பட்டுவிடும். ஜனநாயக வழிமுறையில் நாட்டை வழிநடத்திச் செல்லும் போக்கிற்கும் பங்கம் ஏற்பட்டுவிடும்.

ஜனாதிபதித் தேர்தல் குழம்பும் பட்சத்தில் மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு —

சட்டம் இயற்றும் அதிகாரமுடைய நாடாளுமன்றம் செயற்படக் கூடியதாக இருக்கவேண்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று முதல் வெளியூர் தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச 5

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இன்று வெளியூர்த் தபால்கள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட இருக்கின்றன.

கடந்த ஒரு மாதகாலமாக தேங்கிக் கிடந்த தபால்களே இன்று முதல் விநியோகிக்கப்பட உள்ளன. (ஓ-10)

### ஆசிரியர் கொலை

யாழ்ப்பாணம், டிச 5

கல்லூரி ஆசிரியரான நா. கருணாநந்தசிவம் என்பவர் நேற்றுக்காலை காங்கேசன் துறையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வாக்குவாதம் ஒன்றையடுத்தே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் ஒரு சிறந்த கலைஞரும், நாடக ஆசிரியருமாவார். (உ)

### 60 பேர் கைது

பண்டாரகம, பாணந்துறை ஹொரணைப்பகுதிகளில் 21 மணிநேர ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டது.

அப்போது படையினரின் தேடுதலின்போது அறுபதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். (ஓ)

### இருவர் சுட்டுக்கொலை

அங்குலபெலஸவில் அரச விரோத சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த இருவரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

### முத்திரைத் தட்டுப்பாடு இன்றுடன் நீங்கும்

யாழ்ப்பாணம் டிச. 5

யாழ். தபாலகங்களில் நிலவிவந்த முத்திரைகள் பற்றாக்குறை இன்றுடன் நீங்கும்.

வடபகுதிக்கான தபால் சேவைகள் கடந்த ஒரு மாதமாகச் சீரற்று இருந்ததனால் யாழ். தபால் கந்தோர்களில் முத்திரைகளுக்கும், வான் கடிதங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

தற்போது யாழ். தபாலகத்துக்குத் தபால் பொதிகளுடன் முத்திரைகளும், வான் கடிதங்களும் வந்துசேர்ந்துள்ளதால் தட்டுப்பாடு நீங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது (உ-எ-ஓ)

### கட்டுப்பாட்டு விலையில் மா: இவ்வாரத்தில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், டிச 5

இந்த வாரம் தொடக்கம் பொது மக்கள் கட்டுப்பாட்டு விலையில் மாவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

யாழ் உணவுக் கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் திரு. எஸ். நடேசபிள்ளை இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை 'கடவத்தை' என்ற கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டிருந்த 950 தொன் மாவை விநியோகிக்கும் வேலைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கட்டுப்பாட்டு விலையில் மாவை பெற்றுக் கொள்ளமுடியும் என திரு நடேசபிள்ளை கூறினார். (ஓ 5)

### எரிபொருளுடன் ரயில் யாழ்நகர் வந்தது

சரக்கு ரயில் ஒன்று நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

26 ஆயிரம் லீற்றர் டீசல், 26 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணை, 26 ஆயிரம் லீற்றர் பெற்றோல் உட்பட சுன்னாகம் மின்சார நிலையத்துக்குத் தேவையானஎரிபொருள்களும் இந்த ரயிலில் எடுத்து வரப்பட்டன.

அத்துடன் சீனி பருப்பு போன்ற உணவுப் பொருட்களும் இந்த ரயிலில் எடுத்து வரப் பட்டன. (ஓ-10)

<u>போதியளவு டீசல் வந்து சேர்ந்தது:</u>

### சுன்னாகம் மின் விநியோகம் தொடர்ந்து கிடைக்கும்

யாழ்ப்பாணம் டிச 5

சுன்னாகம் மின் நிலையத்துக்கு ஹெவி டீசல் கொண்டுவரப்பட்டுள்ளமையினால் தற்பொழுது அமுலிலுள்ள நேர ஒழுங்கின்படி மின்சார விநியோகத்தை மேற்கொள்வதில் தடை இருக்காது.

-இவ்வாறு இலங்கை மின்சார சபை வட்டா

(6 ஆம் பக்கம் பார்க்க)

### புன்னாலைக்கட்டுவனில் பெண் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், டிச 5

படையினரைக் கண்டு ஓடியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பெண் ஒருவர் மரணமானார்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றது.

மரணமானவர் வைரமுத்து சின்னச்சி (வயது 45) எனக் கூறப்படுகிறது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

புன்னாலைக்கட்டுவனில் மரணச்சடங்கு ஒன்றுக்கு பிரஸ்தாப பெண்ணும் சென்றிருந்தார்.

அப்பொழுது வயல் வெளிகள் ஊடாக படையினர் வருவதைக் கண்டதும் அங்கிருந்தோர் ஓட்டம் பிடித்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எதையும் எதிர்க்க வேணும் என்டதுக்குத் தானே 'அவையளுக்கு எதிர்க்கட்சி என்டு பெயர்.......!

### பெண் கைது

கொழும்பு, டிச 5

மித்தெனிய பகுதியில் ஜே.வி.பி.இயக்கத்தைச் சேர்ந்த பெண் தீவிரவாதி ஒருவரைப் படையினர் கைது செய்தனர். (ஓ)

### எதிரணியினர் எதிர்ப்பு!

கொழும்பு, டிச. 5

நாடாளுமன்றக் கலைப்புப் பற்றிய ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அறிவித்தலை கிறிஸ்தவ, பௌத்த மதகுருமார்கள் வரவேற்றுள்ளனர்.

ஆனால் எதிர்க்கட்சிகள் இந்த அறிவித்தலை வரவேற்கவில்லை

ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்போது நாடாளுமன்றம் தொடர்ந்து இயங்குவது, சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்த உதவாது என்று தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (உ-எ)

### தெற்கில் கூட்டங்கள் சு. க. நடத்தமாட்டாது

கொழும்பு, டிச 5

தென் மாகாணத்தில் தற்போதைக்கு பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்று தனது அமைப்பாளர்களை சுதந்திரக்கட்சி கோரியுள்ளது.

ஜே. வி பியின் இராணுவப் பிரிவான 'டி. ஜே வி' தென் மாகாணத்தில் சுதந்திரக் கட்சிக்கு தடை விதித்துள்ளது

இதைத் தொடர்ந்தே சுதந்திரக்கட்சி உயர்பீடம் இம் முடிவை எடுத்திருக்கிறது. (உ-எ)

### சுபநேரம்

5 - 12 - 1988
கார்த்திகை 20
திங்கட்கிழமை

சுபநேரம்:-
12-17 முதல் 01-47வரை

ராகுகாலம்:-
7-47 முதல் 09-17வரை

இவை பகலுக்கும் இரவுக்கும்பொருந்தும்,

ஏகாதசி விரதம்

### மாகாணசபை உறுப்பினர் உட்பட மூவர் பலி!

கொழும்பு, டிச 5

வடமேற்கு மாகாண சபை உறுப்பினரான ஐவன் பெரேரா கடந்த வெள்ளி இரவு போத்தலகம என்ற இடத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரைக் காப்பாற்ற முயன்ற அவரின் இரண்டு மெய்க்காப்பாளர்களான தமிழர்களும் இத்தாக்குதலில் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ எ)

### தீவிரவாதிகளுக்கு எதிராக மற்றொரு அணி

#### தெற்கில் இயங்குவதாகத் தகவல்

தென் இலங்கைத் தீவிரவாதிகளுக்கு எதிராக இனந்தெரியாத குழு ஒன்று இயங்கி வருவதாக கொழும்புச் செய்தி கூறுகிறது.

கொலை மற்றும் குற்றச் செயல்களைப் புரிபவர்களை கொல்வதில் இக் குழு ஈடுபட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

கடந்த வாரத்தில் இக் குழுவினால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும்பலரின்சடலங்கள்பகிரங்க இடங்களில் வீசப் பட்டுக்கிடக்கக் காணப் பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

### ஜே. வி. பியைச் சேர்க்க எதிரணியினர் முயற்சி!

கொழும்பு, டிச. 5

தெற்கில் ஐந்து அரசியல் கட்சிகள் சேர்ந்து ஆரம்பித்துள்ள ஜனநாயக மக்கள் அணியில் ஜே வி. பி. (மக்கள் விடுதலை முன்னணி) இயக்கத்தை மீண்டும் சேர்க்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெறுகின்றன என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜே. வி. யின் பிரதிநிதிகள் கொழும்பில் வைத்து திருமதி சிறிமாவோ பண்டார

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் மொழிச்சட்டம் 2வாரங்களில் நிறைவேறும்

#### தூதுவர் டிக்ஸிற் தகவல்

கொழும்பு டிச 5

தமிழ் மொழியை உத்தியோக மொழியாக்கும் சட்டம் இன்னும் இரு வாரங்களில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே.என் டிக்ஸிற் தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு மாகாண சபை இன்னும் பத்துத் தினங்களுக்குள் செயற்பட ஆரம்பித்து விடும்.

தமிழ் நாட்டிலிருந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

<u>மூன்று முகாம்களிலிருந்து</u>

### பொலீஸ் அதிரடிப்படை கிழக்கில் விலகுகிறது

கொழும்பு, டிச 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊறணி, முறக்கொட்டாஞ்சேனை, திருக்கோவில் ஆகிய மூன்று முகாம்களில் இருந்து இலங்கை அரசின் விசேட பொலீஸ் அதிரடிப்படை விலக்கிக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அமைதிப் படை இம்மூன்று முகாம்களையும் பொறுப்பு ஏற்றுள்ளது.

விலக்கிக்கொள்ளப்பட்ட இலங்கை பொலீஸ் அதிரடிப் படையினர், இப்போது கொழும்பில் இலங்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

### மற்றொரு நவீன போதனா வைத்தியசாலை யாழ் நகரில் ரூ. 50 கோடி செலவில்

யாழ்ப்பாணம், டிச. 5

நவீன போதனா வைத்தியசாலை ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கான வாய்மூல (Oral) அனுமதியை ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன வழங்கியிருக்கிறார்.

இந்த வைத்தியசாலை 500 படுக்கை வசதிகளுடன் சுமார் 50 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் இந்த வைத்தியசாலை நிர்மாணிக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து யாழ்ப்பாணத்துக்கு நவீன வசதிகளைக் கொண்ட ஒரு போதனா வைத்தியசாலை அவசியம் என்பதை சுட்டிக்காட்டியுள்ளது. இதனை அடுத்தே இந்த வைத்தியசாலையை அமைப்பதற்கான வாய்மூல அனுமதியை அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வெளியிட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள் ஹோல் செற். Show Case, கண்ணாடி மேசை, டேசறி மேசை, பெற்றோல்மெச்ஸ் Baby Cot. சாட்டில் Singer Hand Machine மற்றும் பல உடனடிமலிவுவிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 326 பிரதான வீதி. யாழ்ப்பாணம் (சென். பற்றிஸ் சந்தி அருகாமையில்) (7797)

K 125 80 ஸ்ரீ சுசுக்கி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மாட்டிறைச்சிக் கடை, சுன்னாகம் சந்தையில் இரண்டு மணிக்கு முன்பாக சந்திக்கவும். (8'3')

### நாற்றுக்கள் விற்பனைக்கு

தரமான தக்காளி. மிளகாய், கத்தரி. பூக்கோவா நாற்றுக்களும் ஊறுகாயும் எமது பண்ணையில் விற்பனைக்குண்டு. இரண்டு இலட்சம் புளி மாங்கொட்டை விதைகள் தேவை. விலை கொடுத்துவாங்குவோம். உடன் தொடர்பு கொள்ளவும். சைவ வித்தியாவிருத்திச் சங்கம்- கலாசாலை வீதி திருநெல்வேலி (8'35)

### நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (C/357)

### தவறிவிட்டது

தங்கத்துரை இராமநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல 572561990V (1ஆம் வட்டாரம நிலாவெளி. திருகோணமலை) எனும் விலாசமுடையது 1-12 88 அன்று யாழ்ப்பாணம் Town இல் தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7790)

காயத்திரி கிப்ற் சென்றரில் 2 12-88 அன்று வாடிக்கையாளர்களால் எடுத்த போட்டோ பிரதிகளோடு சுப்பிரமணியம் சிவகுமாரனின் வன் செல்லினுல்ஏற்பட்ட நஷ்ட ஈடு தொடர்பான பொலீஸ் அறிக்கை பொன்று தவறுதலாக கொடுக்கப்பட்டு விட்டது அவரின் நன்மை கருதி அதனை ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம். இ சுப்பிரமணியம் அன் கோ 8K. K S வீதி, சுன்னாகம். (C/872)

## தேவை

ஆண்டு 3, 5இல் கற்கும் பிள்ளைகளுக்கு வீட்டில் வந்து பாடங்கள் கற்பிப்பதற்கு பெண்பிள்ளை ஒருவர் தேவை. தொடர்பு- 397 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8024)

7 குதிரைச் சக்தி (H P) கொண்ட மோட்டார்களை உடைய தொழிற்சாலைக்கு 3 பேஸ் மின்சாரம் (3 Phase) வழங்கக்கூடிய ஜெனரேட்டர் வாடகைக்கு உடன் தேவை தொடர்பு: பேன் உலோகத் தொழிற்சாலை, 6", மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (8029

## மணமகன் தேவை

அரசாங்க சேவையில் உள்ள யாழ்ப்பாணத்தில் கடமை புரியும் இந்து வேளாளர்குல 37 வயதுக் கன்னிப் பெண்ணுக்குப் பொருத்தமான வரன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: 392, C/o உதயன், யாழ்ப்பாணம். (7929)

### சுஜோ ரவல்ஸ்

அமெரிக்கா (America விற்குப் பிரயாணம் செய்வதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது செல்ல விரும்புவோர் சாமதியாது 7ஆம் திகதிக்குப் பின்னர் சுஜோஸ் ஸ்தாபனம், இல 21, வேம்படி ரோட். யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C/ 861)

### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் யாழ் மாவட்டக் கிளைகளின் பாவனைக்காகத் தகுதிவாய்ந்த சிறிய ஜெனரேட்டர்கள் வாடகைக்குத் தேவைப்படுகின்றன மேல் விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். இலங்கை வங்கி. மாவட்ட காரியாலயம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 867)

## காணவில்லை

ரஜப் என்னும் 12 வயதுடைய சிறுவன் காணாமற்போய் விட்டார். இவர் கறுப்பு நிறமும் கட்டையான தோற்றமும் உடையவர் இவரைக் கண்டால் பத்ரின்ஸ், ஜும்மா மொஸ்கலேன் என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். இதனையிட்டு இவரது அப்துல் மஜீத் அப்பா கண்ணீர் வடிக்கிறார். (7800)

## நன்றி நவிலல்

### திருமதி தங்கம்மா கந்தையா

28-11-88 இல் நடைபெற்ற அன்னாரது ஈமச்சடங்கு ளில் கலந்து கொண்டவர்கட்கும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்கட்கும். அவரது ஈமச்சடங்கைச் செவ்வனே நடத்த பல வகைகளிலும் உதவி செய்தவர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

க. கோபாலபிள்ளை, 111, அரசடி வீதி, கந்தர்மடம். (7791)

யாழ் மாநகரத்தின்

# புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க வரியிறுப்பாளரின் ஒத்துழைப்பு அவசியம்

## மாநகர ஆணையாளர் அல்பிரட் கோரிக்கை

யாழ்ப்பாணம் டிச 5

யாழ் மாநகர வரியிறுப்பாளர்களின் முழு ஒத்துழைப்பையும், உதவியையும் நான் எதிர்பார்த்து நிற்கிறேன்.

யாழ் மாநகரத்தின் புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு வரியிறுப்பாளர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதாகும்

யாழ் மாநகர ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

யாழ் மாநகர வரியிறுப்பாளர்களிடமிருந்து நீங்கள் எத்தகைய ஒத்துழைப்பையும், உதவியையும் எதிர்பார்த்திருக்கிறீர்கள் என்று வினவியதற்கு அவர் கூறியதாவது;

வரியிறுப்பாளர்கள் தாம் செலுத்தவேண்டிய வரிப் பணத்தை உரிய காலத்தில் தவறாது செலுத்துவது நல்லது

வரி நிலுவை உள்ளவர்கள் தாம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை செலுத்துவது நல்லது

ஏனெனில் மாநகராட்சி மன்றத்தால் அப்போது தான் புதிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும்.

இத்தகைய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு மத்திய அரசாங்கத்தின் நிதியும் வரிப் பணத்துடன் சேர்த்தே பயன்படுத்தப்படுகிறது

மின்சார விநியோகத்தைப் பொறுத்தவரையில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவது மாநகராட்சி மன்றத்துக்கு ஒரு பெரிய இழப்பு என்றே கூற வேண்டும்.

ஏனெனில் மின்சார சபைக்கு மாநகராட்சி மன்றம் கூடிய தொகை மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தவேண்டிய நிலை ஏற்படுகிறது இதனால் மாநகராட்சி மன்றத்தின் வருமானம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

நிலைமை சீரடைந்து சட்டமும் ஒழுங்கும் நடைமுறைக்கு வரும் போது சட்டவிரோத மின்பாவனை குறித்து தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்

சட்டவிரோத மின் பாவனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-ஐ)

# சீதவாக்க அரசரின் வழித்தோன்றலில் வந்தவர்

## ஆளுநர் நளின் சேனவிரத்ன

கொழும்பு டிச 5

வடக்கு — கிழக்கு மாகாண சபை ஆளுநரான லெப்டினன்ட் ஜெனரல் நளின் சேனவிரத்ன சீதவாக்க அரசர் ராஜசிங்காவின் வழித்தோன்றல் என்று கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில தினசரி ஒன்று வர்ணித்துள்ளது.

நளின் சேனவிரத்னவின் நேரடி மூதாதையர் எஹலிய கொட சேனாதிபதி கனேகொட சேனவிரத்ன. ராஜசிங்க மன்னரால் நேசிக்கப்பட்டார், அவரைக் கண்டு போர்த்துக்கீசர் பயந்தனர்.

பின்னர் சேனவிரத்னக்கள் அத்தனகல, தங்கல்ல, கோம்பேரட்டவான, ஹெய்யன்துருவ. தல்வதுத ஆகிய இடங்களுக்குக் குடிபெயர்ந்தனர்.

இலங்கை டச்சுக்காரர்கள். பிரிட்டிஷ் ஆட்சிகளின் கீழ் இருந்த சமயம் சேனவிரத்ன குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு சிவில் நிர்வாகத்தில் நிர்வாகப் பதவிகள் வழங்கப்பட்டன ஆனால் அவற்றை அவர்கள் ஏற்கவில்லை.

திரு. நளின் சேனவிரத்னவின் ஒரு சகோதரர் அனுர சேனவிரத்ன. 1977 இல் பொலீஸ் மா அதிபராக பணியாற்றியவர், மற்றவர் இராஜதந்திரியாகப் பணியாற்றும் காமினி ... ( )

# கோழிப் பண்ணையைக் கூட நிர்வகிக்க முடியுமா?

## ஒஸியிடம் அனுரா கேள்வி

கொழும்பு, டிச 5

ஜனாதிபதி வேட்பாளர் திரு ஒஸி அபய குணசேகரா ஒரு பட்டினசபை உறுப்பினராகக் கூட இருந்தவர் அல்லர் அவரால் நாட்டை எப்படி ஆள முடியும்? ஒரு கோழிப் பண்ணையைக் கூட அவரால் நிர்வகிக்க முடியுமா?

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா குருவிற்ற என்னுமிடத்தில் நடந்த பிரசாரக் கூட்டங்களில் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று ஐ தே க முன்னணித் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்க பதினொரு பக்கக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

ஆனால் இலங்கை மக்கள் கட்சி அதனைப் புறக்கணித்து விட்டு யுஎன். பியின் 'கயிறைத் தின்று விட்டு' ஒஸி அபயகுணசேகராவை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தியுள்ளனர்.

—இப்படி திரு அனுரா பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார். (உ-எ)

# ஆழியவளையில்

## வயிற்றோட்ட நோய் பரவுகிறது குழந்தை மரணம்

தாளையடி. டிச 5

வடமராட்சி கிழக்கில் உள்ள ஆழியவளை என்னுமிடத்தில் வயிற்றோட்ட நோய் குழந்தைகளுக்கு பரவி வருகின்றது.

இந் நோயினால் குழந்தை ஒன்றும் மரணமாகி உள்ளது

பல குழந்தைகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றன

அண்மையில் பெய்த மழையை அடுத்து அப்பகுதியில் உள்ள கிணறுகளின் நீர் அசுத்தமடைந்து துர்நாற்றம் வீசத் தொடங்கி உள்ளது.

இதன் பின்னரே வயிற்றோட்ட நோய் அப்பகுதியில் வேகமாகப் பரவி வருவதாகக் கூறப்படுகிறது. (ஓ சி 144)

# மட்டக்களப்பிலும்

## உணவு - எரிபொருள் தட்டுப்பாடு

மட்டக்களப்பு, டிச 5

மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை துண்டிக்கப் பட்டுள்ளதால் இம் மாவட்டத்தில் உணவு, எரிபொருள் களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

அரச களஞ்சியத்தில் கையிருப்பிலிருந்த அரிசி கோதுமை மா முற்றாக முடிவடைந்து விட்டன.

இங்கு அரிசிஒருகிலோ- ரூபா 12 ஆகவும், கோதுமைமா ஒருகிலோ-ரூபா 9 ஆகவும் விற்பனை செய்யப் படுகின்றன.

சந்தையில் வெளியூர் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

உள்ளூர் மரக்கறி வகைகள் மட்டும் தான் விற்பனையாகிறது.

பச்சை மிளகாய் கிலோ- ரூபா 40 தொடக்கம் ரூபா 50 வரையும் கத்தரி, பயற்றை. வெண்டி, கிலோ - ரூபா 20 25 வரை வெங்காயம் கிலோ ரூபா ... ரூபா 32 வரையும் விற்பனையாகின்றன. (ஓ- ச- 21)

# பொம்மை வெளி வாசிகளுக்கு அஸ்பெஸ்ரஸ் கூரை வீடுகள்

குருநகர், டிச. 5

"யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம்" பொம்மை வெளிப்பகுதியில் 156 வீடுகளை பொதுமக்களுக்கு அமைத்துக் கொடுத்துள்ளது.

அஸ்பெஸ்ரஸ் கூரை போடப்பட்ட மேற்படி 156 வீடுகளும் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த சகல பாதிக்கப்பட்ட குடிசை வாசிகளுக்கும் வழங்கப் பட்டது

திருச்சபை நிதியில் இருந்து 8 லட்சரூபாவை நிலைய இயக்குநா வண. பிதா எம் ஈ. பயஸ் அடிகளார் மேற்படி திட்டத்திற்கு ஒதுக்கி இருந்தார். (ஓ-சி-51)

தீவுப் பகுதியில்:

# வெங்காயச் செய்கை

## மழையின்மையால் பாதிப்பு

வேலணை டிச 5

தீவுப்பகுதியில் இம்முறை வெங்காயச் செய்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

வழமையாக புகையிலை மிளகாய் பயிரிடப்படும் தோட்டங்கள் பலவற்றில் இம்முறை வெங்காயம் நாட்டப்பட்டுள்ளது

எனினும் மழையின்மையால் பல ஏக்கர் கணக்கான வெங்காயச் செய்கை கருகிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறிருக்க இவ்வருடம் புதுவித வெளிறல் நோயும் மிகவும் மோசமாக வெங்காயத்தைத் தாக்கியுள்ளது.

தொடர்ந்து மழை பெய்யாது விட்டால் இப் பகுதி வெங்காயச் செய்கையில் பெருமளவு நஷ்டம் ஏற்படும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர் (ஓ-ச-167)

# மட்டக்களப்பில் 2 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி

மட்டக்களப்பு, டிச 5

ஜனாதிபதித்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 லட்சத்து 10 ஆயிரத்து 126 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு-97 181 பட்டிருப்பு- 55, 309 கல்குடா 57 636 ஆகும். (ஓ-21)

# தாதிகள் நேர்முகப் பரீட்சை

மட்டக்களப்பு, டிச 6

தாதிகள் பயிற்சிப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற 141 பேருக்கு அண்மையில் மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பணிமனையில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

மருத்துவமாது பதவி நேர்முகப்பரீட்சையில் தொகுதிக்கு 11 பேர் என்ற அடிப்படையில் 44 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சையும் அண்மையில் நடைபெற்றது. (ஓ-ச 21)

# புலமைப் பரிசில் பெற்று ரஷ்யா பயணம்

மட்டக்களப்பு டிச 5

மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வி நிர்மலினி அஞ்சலா அருளானந்தம் உயர் கல்வி அமைச்சினால் புலமைப் பரிசில் பெற்று அண்மையில் ரஷ்யா பயணமானார்

கம்பியூட்டர் பொறியியல் துறையில்பட்டதாரி கல்வியை 5 வருடங்கள் ரஷ்யா பல்கலைக்கழகத்தில இவர் மேற்கொள்வார்

புனித சிசிலிய மகளிர் வித்தியாலயம், வின்சன்ற் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியான இவர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர். ரீ. அருளானந்தம்தம்பதிகளின் புதல்வி ஆவார். (ச-21)

# இளம் பெண் தற்கொலை

சாவகச்சேரி, டிச 5

மட்டுவில் வடக்கு சிவன் கோவிலடியில் 23 வயது இளம் பெண் ஒருவர் கிருமி நாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

குடும்பத் தகராறே தற்கொலைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது

# வைத்தியசாலை ஆலயத்துக்கு மயில்வாகனம்

காங்கேசன்துறை டிச 5

காங்கேசன்துறை மார்புநோய் வைத்தியசாலை முருகன் ஆலயத்திற்கு புதிய மயில்வாகனம் ஒன்று பல ஆயிரம் ரூபா செலவில் செய்யப் பட்டுள்ளது.

மேற்படி ஆலய 36 ஆவது வருடாந்த திருவிழா கடந்த 27 ஆம் திகதி சிறப்பாக இடம் பெற்றது.

அன்றையதினம் மேற்படி புதிய மயில்வாகனத்தில் முருகப் பெருமான் வீதியுலா வந்தார். (ஓ-68)

# ஆத்மீக சாதனை

யாழ்ப்பாணம், டிச 5

திருநெல்வேலி பல்கலைக்கழகத்துக்குச் சமீபமாகவுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் தொடர்ந்து 40 நாட்களுக்கு ஆத்மீக சாதனைகள் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.


WHEN YOU WANT TO OPEN THE RIGHT DOORS IN SRI LANKA REMEMBER

SHABRA

We have proved Stability

We have shown Honesty

We are very much Advanced

We have the most Backing

We are so Reliable

Thats why we are on the move Ahead

for more details please contact:

Shabra Unico Finance Limited

207 Power House Road,

JAFFNA.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வேகமாக விற்பனையாகின்றன!

ENGLISH TEACHERS EXAMINATION

உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி

அஸ்ரன் வெளியீடு:
விலை ரூபா 47. 50

1982, 83, 84, 87இல் நடைபெற்ற பரீட்சைகளின் மாதிரி வினாவிடைகளையும் உள்ளடக்கியது.

கிடைக்குமிடங்கள்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை - யாழ்.
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்.
(C/ 840)



FORTUNA ENTERPRISES
வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

1, தைவான்
தொழிற்சாலைத் தொழிலாளர்
(Unskilled Factory Workers)
சம்பளம் — ரூபா 12, 000/ +
இருப்பிட வசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)
வயது - 22 — 32

2. குவைத்
தொழிலாளர் Labourers
சம்பளம் 30 KD — 3300 +
இருப்பிடவசதி

3. சிங்கப்பூர்
SINGAPORE: Mould Makers
(அச்சு அமைப்பாளர்)
சம்பளம் S $, 1500/- — Rs. 24000/-+
இருப்பிட வசதி

நாடவேண்டிய முகவரி;-
யாழ்ப்பாணப் பிரதிநிதி

இ. விஸ்வேஸ்வராயன்
3 ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.
(C/851)


# சிறுவர் இலக்கியத்துக்கு
## அடி எடுத்துக் கொடுத்தவர் நாவலர்
### நூல் வெளியீட்டில் கலாநிதி சுப்பிரமணியம் உரை

சிறுவர் இலக்கியத்துக்கு அடிஎடுத்துக் கொடுத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலராவார். நாவலருக்குப் பின் 1938 ஆம் ஆண்டளவில் அமரர் அருள் நந்தியும் அதன் பின் கிருஷ்ண பிள்ளை குமாரசுவாமிப் புலவரும் அண்மைக் காலத்தில் சொக்கனும் இன்று அநு வை. நாகராஜனும் சிறுவர்களுக்கான நூல்களைப் படைத்துள்ளனர். இவர்களின் முயற்சி என்றும் பாராட்டப்பட வேண்டியவை.

யாழ் இலக்கிய வட்டத்தின் அனுசரணையுடன் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அநு. வை. நாகராஜனின் "காட்டில் ஒரு வாரம்" என்னும் சிறுவருக்கான நூல வெளியீட்டில் உரையாற்றும் பொழுது யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி நா சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வெளியீட்டுக்கு யாழ் கல்வித் திணைக்கள பதில் கல்விப் பணிப்பாளர் திரு கு சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

கலாநிதி சுப்பிரமணியம் தனது உரையில் மேலும் கூறியதாவது ' நூலாசிரியர் நாகராஜன எடுத்த கருமத்தை செய்து முடிப்பவர்.

ஒரு செயல் வீரன். சிறுவர் இலக்கிய படைப்பில் ஆர்வம் கொண்டவர்.

இவரின் கொள்கைகளும் குணங்களும் இப் புத்தக வெளியீட்டுக்கு உதவியுள்ளன. இப்படி அவர் கூறினார்.

பேராசிரியர் அ சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துகையில் "எமது நாட்டில் கிடைக்கும் சிறுவர்களுக்கான நூல்களில் சிறுவர்களைப் பற்றி எழுதுகிறார்களே அன்றி சிறுவர்களுக்கு என எழுதுவதில்லை.

நாகராஜனின் நூல் இந்தக் குறையை நிவர்த்தி செய்துள்ளது"; எனக் கூறினார்.

திரு. சோமசுந்தரம் தனது தலைமை உரையில் ' சிறுவர்களுக்காக எழுதப்படும் நூல்களில் குழந்தைகளின் உளவியல், நாட்டம், சூழல் ஆகியவை பிரதிபலிக்க வேண்டும்.

பிள்ளைகளின் இயல்புகளை விளங்கி அவர்களின் ஆற்றலைத் தட்டி எழுப்ப வேண்டும்.

இறக்குமதி செய்யப்படும் நூல்களில் எமது சூழலோ மண்வாசனையோ பார்ணமிப்பதில்லை"

யாழ் இலக்கிய வட்டத் தலைவர் "செம்பியன் செல்வன்" கலாநிதி சபா. ஜெயராஜா, கலையரசு ஏ. ரி பொன்னுத்துரை, மயிலங்கூடல் பி. நடராஜன், 'செங்கை ஆழியன், திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும் ஆய்வுரை நிகழ்த்தினர்
(இ-ச)

# வசந்த மண்டபக் காட்சி
## இறை சிந்தனையைத் தூண்டுகிறது
### ஆத்மஜோதி முத்தையா உரை

யாழ்ப்பாணம், டிச 5
எமது மனதைப் புலன்களின் வழி செல்ல விடாது நாம் இறைவனைச் சிந்திப்பதற்கு வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் எழுந்தருளி மூர்த்தியின் கண் கொள்ளாக்காட்சியே எம்மைத் தூண்டுகிறது.

இக்காட்சியைக் அகக் கண்களில் அமர்த்தித் தியானிக்கும் பொழுது தான் தியானம் என்பது உருவாகிறது.

யாழ். அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற பாலஸ்தாபன மகாகும்பாபிஷேகத்தில் உரையாற்றும் பொழுது ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

"ஆலய வழிபாட்டின்போது அடியார்களாகிய நாம் திருத்தொண்டு புரியவேண்டும்

எமது கன்ம வினைகள் யாவும் தீர்க்கும் விநாயகப்பெருமானுக்குத் தொண்டு புரிவதன் மூலம் யாவற்றையும் நீக்கிவைப்பார்,

ஆலயங்களில் இறைவன் திருநாமமும் பஜனையும் ஒலிக்கப்படவேண்டும்.

இப்படிஅவர்கூறினார்.

பிரம்ம ஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் உரையாற்றும்போது;

ஆலயத்தின் உள்வீதியில் காணப்படும் புல் பூண்டுகளை அகற்றுவதன் மூலம் நாம் எமக்குள்ளே வளர்ந்துவரும் ஆணவம், கன்மம், மாயை யாவற்றையும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் நீக்கிவிடுவார்" என்றார்.

திரு பாலசுப்பிரமணியம் பேசுகையில்; அத்தியடி விநாயகப் பெருமான் சிந்திப்போர் யாவரினதும் சிந்தையிலே நிறைந்து வரம் கொடுக்கும் வள்ளல் என விநாயகரின் மகிமையை எடுத்துரைத்தார். (ச)

## ஒரே சூலில் 2 கன்றுகள்

நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த திரு சிமியோன் பிரான்சிஸ்சுக்குச் சொந்தமான பசுமாடு ஒன்று ஒரே சூலில் இரண்டு கன்றுகளை ஈன்றுள்ளது.

இங்கு ஒருபசு இரண்டு கன்றுகளை ஈன்றிருப்பது இதுவே முதன் முறை என்று இங்குள்ள 85 வயதுள்ள ஒரு வயோதிபர் கூறினார். (ச-111)

## இடம் மாற்றம்

நெல்லியடி கணேஸ் அறிவாலயத்துக்கு அண்மையில் நடைபெற்ற அசம்பாவித சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து நெல்லியடிச் சந்தை நெல்லியடி முருகையன் கோவிலடிக்கு இடம் மாறியுள்ளது. (ச-160

## கிராம சேவை அலுவலராக நியமனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் 10 பேர் உள் நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கிராம சேவை அலுவலகர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## நாட்டின் சனத்தொகை
### 1கோடியே63லட்சம்

கொழும்பு, டிச 5
இலங்கையின் சனத்தொகை 1கோடி 63லட்சம் என்று மத்திய வங்கி அறிவித்திருக்கிறது.

1986இல்சனத்தொகை 1கோடி 50 லட்சம் இலக்கை அடைந்தது. 1987 இல் 1கோடி 60 லட்சம் இலக்கைக் கடந்தது.

சனத் தொகையில் 83லட்சத்து 39 ஆயிரம் பேர் ஆண்கள் 80லட்சத்து 20ஆயிரம் பேர் பெண்கள்

ஆண்களில் 58 ஆயிரம் பேரும் பெண்களில் 55 ஆயிரம் பேரும் 80 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இப்படி மத்திய வங்கி புள்ளி விபர அறிக்கை தெரிவிக்கிறது. (உ-எ)

## பருத்தித்துறையில் ஈ பி.ஆர் எல்.எவ் அலுவலகம்

வடமராட்சி டிச 5
பருத்தித்துறையில் ஈ பி. ஆர் எல் எவ் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீலங்கா பொலீஸ் நிலையத்திற்குச் சமீபமாக வுள்ள ஒரு வீட்டிலேயே இந்த அலுவலகம் செயற்படுகிறது. (ஒ-160)


சவூதி அரேபியாவுக்கு
உடனடி வேலைவாய்ப்பு

| | சம்பளம் |
|---|---|
| 40 பேர் கனரக சாரதிகள் (H V Drivers) | 750 SR |
| 200 பேர் கிளீனேர்ஸ் | 400 SR |

| | |
|---|---|
| வயதெல்லை சாரதிகளுக்கு | 24-45 வரை |
| கிளீனேர்ஸ் வயதெல்லை | 21-45 வரை |

பத்து (10) நாட்களுள் பயணம். கடவச்சீட்டுடன் மூன்று கடவுச்சீட்டு சைஸ் போட்டோக்கள்.

உடன் தொடர்பு கொள்ளவும்.

T. V. TRAVELS & TOURIST
BROWN ROAD
(Railway Station Front)
KOKUVIL
(C-875)



JAFFNA ENGLISH ACADEMY
(A LUX IN TENEBRIS)

● Spoken English :
✶ 2 மாதத் துரிதப் பயிற்சி
வெளிநாடு செல்வோருக்கு சிறந்தது.
✶ அச்சடித்த குறிப்புக்கள் இலவசம்
✶ தனிப்பட்ட கவனம்,
Full Course Fee: Rs. 150/.
Lectures: Tuesdays, Wednesdays & Thursdays
8-30 a. m. to 10-30 a. m.
Commencement: 8.12.88

● உதவி ஆங்கில ஆசிரியர் தேர்வு
One Month Special Intensive Course designed to meet the Examinational Requirements:
Full Course fee: Rs 100/- only
Lectures: Tuesdays, Wednesdays & Thursdays
10 30 a. m. to 12-30 p. m.
Commencement: 8 12.88

● NCE (Elementary) Examination:
LONDON CERTIFICATE
London Examination held in Jaffna English Academy
The Local Examination Centre for Pitmans

Assessment of Answerscripts and Award of Certificates from Pitsmans London.

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்றுப் புலமை பெறவும் LONDON CERTIFICATES பெறவுமரியதொரு சந்தர்ப்பம்.
Lectures: Saturdays & Sundays
10.30 a. m. to 12.30 p. m.
Duration: 3 months
Course fee: Rs, 350/. only
Commencement: 4.12.88

● TOEFL:
Lectures: Saturdays & Sundays
8 - 30 a. m. to 10 - 30 a. m.
Duration: 3 months
Course fee: Rs. 300/- only
Commencement: 4.12.88

விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்
9, Rakka Lane, Chundikuli, Jaffna.
(C-862)



சிங்கர்
விவசாய நீரிறைக்கும் இயந்திரம்
சேனை, வயல், இரத்தினக் கற் குழிகளுக்கு முற்றிலும் உகந்தது

அதிக செயலாற்றல்
மணிக்கு 8250 கலன் இறைக்க வல்லது
செலவுச் சிக்கனம்
குறைந்தளவு எரிபொருளில் அதிக சேவை.
நீடித்த பாவனை
நவீன சிங்கர் தொழில்நுட்ப உற்பத்தி என்பதால் அதிக காலம் உழைக்கும். பெற்றோல் அல்லது மண்ணெண்ணெய்யில் இயங்கும் 4 குதிரைச் சக்தி கொண்ட உலகப்புகழ்வாய்ந்த ஹொண்டா ஜீ. கே. என்ஜின் பொருந்தியது.
இரண்டு வடிவ அமைப்புகள் உள்ளன.
● எஸ். பி. 50 (மார்க் 2)
விலை. ரூ: 11, 390/-
● என் எஸ். பி. 50
விலை: ரூ. 11,290/-
உதிரிப் பாகங்கள் நாடெங்குமுள்ள சிங்கர் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்



விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை
சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.
Minds/SA/8



சாவகச்சேரி நகராட்சி மன்றம்
1989ஆம் ஆண்டிற்கான
கேள்வி அறிவித்தல்

எமது 07-11-88 ஆம் திகதிய விளம்பர அறிவித்தல் சார்பாக—

1989ஆம் ஆண்டுக்கான இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடல், வாகனம் நிற்பாட்டுமிடங்களில் குத்தகை அறவிடுதல், குப்பை கூழங்களை அகற்ற இரட்டை மாட்டு வண்டில்/உழவு இயந்திரம் (பெட்டி உட்பட) வாடகைக்கு வழங்கல் ஆகியவை சம்பந்தமான கேள்விகள் முடிவுத்திகதி பின்வருமாறு பின்போடப்பட்டுள்ளது:

1. கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் திகதி 09 12 88ஆம் திகதி நண்பகல் 12. 30 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 12-12-88 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
02. 12. 88
(C/468)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கியல்
ஜி. சி. ஈ. உயர்தரம்
வினு விடை 1987 1988
மற்றும் சில முக்கிய விடயங்கள்
ஆக்கம்:
க. தங்கராஜா, B. Sc.
(P F T) Sp, Dip in Ed.
கிடைக்குமிடம்:
✶ பூபாலசிங்கம் புத்தகசாலை
✶ சிறிலங்கா புத்தகசாலை
(7789)


# கிழக்குப் பகுதியில் 5 முகாம்கள் வாபஸ்

மட்டக்களப்பு, டிச 5

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து அண்மையில் 5 விசேட அதிரடிப்படை முகாம்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

திருக்கோவில், சரடியனாறு, சந்திவெளி, ஊறணி, குப்புறுப்பனை ஆகிய இடங்களில் இயங்கி வந்த முகாம்களே இவையாகும்.

புல்லுமலை, சளுவாஞ்சேடி, கல்லடி முகாம்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. (ஓ-ச-21)

# நளின் ஆசிர்வாதம் பெற்றார்

கொழும்பு டிச 5

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்தின கல்கிஸ்ஸ தாமபால ராமய விகாரைக்குச் சென்று ஆசி பெற்றார்.

வண. கொட்டகொட தம்மவாச அதிசரண சங்கநாயக்க தேரரும் பிக்குகளும் மந்திரங்கள் ஓதி ஆசிர்வதித்தனர்.

வண. தம்மவாச நிகழ்த்திய சிறு உரையில்—

"கௌதம புத்தர் இலங்கை வரும் முன்னரே வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புத்த தர்மமும் பௌத்த சிற்பக் கலையும் இருந்தன. சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களை ஒன்றிணைக்கும் சரித்திரப் புகழ் வாய்ந்த பொறுப்பை புதிய ஆளுநர் ஏற்றிருக்கிறார்" — என்று கூறினார். (ஒ-எ)


## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி வத்சலாதேவி முத்தராசா (பபி)
அன்னையின் மடியில்.- 08- 06- 1963
இறைவனடியில்:- 20- 11-1987
திதி:- 08- 12- 1988


அவலம் ஒன்று வந்து போய் - வத்சலா
ஆண்டொன்று முடிந்தது வத்சலா
அழுவதை விடுவதெப்படி வத்சலா
அழகாக அஞ்சலி செய்வோம் வத்சலா
வையத்துள் வாழ்ந்தது போதுமென்று-நீ
வானகம் சென்று விட்டாய் வத்சலா
உன் ஆத்மா சாந்தியடைய - நாம்
உணர்ச்சியின்றி பிரார்த்திக்கின்றோம். வத்சலா

உன்பிரிவினால் வாடும்:
குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.

கல்லூரி வீதி,
ஒட்டகரை,
பருத்தித்துறை. (8158)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



குமாரசாமி சத்தியகுமார்
தோற்றம்! 19- 3- 1961
மறைவு: 18- 11- 1987
திதி; 5- 12- 1988

அன்புள்ள எங்கள் செல்வமே! அண்ணாவே! ஊர் பண்புகளனைத்தையுமே உளத்தாக்கி வாழ்ந்தெமக்கு வழிகாட்டி இன்று நீ எம் கண்களெல்லாம் நீராக காலம் எல்லாம் நாம் வாட, விண்ணுலகம் சென்றாயோ மகனே!

மகனே! சோதரனே!! அட்டூழியத்துக்குப் பயந்து அகதிகளாய்ச் சென்ற இடத்தில் உன் சேதி கேட்டு செய்வதறியாது திகைத்துத் திணறினோமையா! உன் உயிரற்ற சடலத்தைக் காணத பாவிகள் கதறி அழுதோமையா! நீர் சூடுபட்டு வீழ்ந்தபோது சூழ்ந்து நாம் நிற்கவில்லை! மயங்கிச் சரிகையில் மகனே மார்போடு அணைக்கவில்லை ஐயா! உமது புகைப்படத்தைப் பார்த்து இங்கே ஏங்கி நித்தம் கலங்குகின்றோம் ஐயா! அண்ணாவே! நாங்கள் இங்கே துடிதுடித்து படகுப்பால் துயரத்தால் வாடுகின்றோம்.

ஓராண்டு சென்றதையா! எமதில்லம் இருண்டதையா! துயரத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு ஆழ்கடலில் கொள்ளச் சென்றதெங்கே! இத்தரணியில் வாழ்ந்தது போதும் என்றோ எம்மை விட்டுச் சென்று விட்டீர்

உமது ஆத்மா சாந்தியடைய தினமும் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்தும்:

தந்தை, தாய், சகோதரர்கள்,
நண்பர்கள், உற்றார், உறவினர்கள்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (7785)



## 90ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி கிரிஷாந்தி இராஜலிங்கம்
(மாணவி-வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
(கோப்பு - அச்சுவேலி - கோப்பாய்)
மண்ணில்: 22-12-1971
விண்ணில்: 5-9-1988

எமது அன்புச் செல்வமே!
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி எய்திய உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை, தம்பி.

பாரம்பற்றை,
கோப்பாய். (7796)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை, பளை

## கேள்வி அறிவித்தல்

பளை பொதுச்சந்தையிலும், இயக்கச்சி பொதுச் சந்தையிலும் உள்ள கடைகளை வாடகைக்குக் கொடுப்பதற்கான

## கேள்வி அறிவித்தல்

பளை பொதுச் சந்தையிலும், இயக்கச்சி பொதுச் சந்தையிலும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 6 கடைகளுக்கும் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும் அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் 26-12-88 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான விண்ணப்பங்கள் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவத்திலே அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் மீளளிப்புச் செய்யப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 50/- யும் மீளளிப்புச் செய்யப்படும் கேள்விப் பிணைப் பணம் ரூபா 500/- யும் செலுத்தி 21-12-88ம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் செய்வோர் தமது தேசிய அடையாள அட்டையினையும் காட்டி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

| கடையின் விபரம் | ஒரு கடையின் ஆகக் குறைந்த முற்பணம் |
| --- | --- |
| 1. பளைச் சந்தைக்கடை (பொதுச்சந்தை) ஒன்றுக்கு | - ரூபா 50,000/- |
| 2. இயக்கச்சி பொதுச் சந்தைக்கடை ஒன்றுக்கு | - ரூபா 35,000/- |

இதுபற்றிய மேலதிக விபரங்களை இக் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். கந்தசாமி,
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பளை.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பளை. C/469


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குமாரசாமி சங்கரப்பிள்ளை
(வைத்திலிங்கம்)
(கனிஷ்ட அதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)
தோற்றம்:- 18. 12. 1924
மறைவு:- 8. 12. 1985
திதி:- 5. 12. 1988

அன்னையும் அறுவர் நாமும் அனுதினம்
புலம்புகின்றோம்
உன்னிடம் பாரமென்றோ ஓடினாய் உலகை
நீத்தே
இன்னமுதூட்டிக் காத்த எந்தையே என்ன
செய்வோம்
முன்னர் நீ விளைத்த அன்பு முதிர்வினில்
கலங்குகின்றோம்.

மனைவி பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சிவகிரி"
பெரிய அரசடி,
சாவகச்சேரி (7788)

# நெல்லியடியில் இரு இளைஞர் பலி

வடமராட்சி, டிச. 5

நெல்லியடியில் உள்ள கணேஸ் அறிவாலய நூல்நிலையத்துக்குச் சமீபமாக நடைபெற்ற அசம்பாவிதம் ஒன்றின் போது இரு இளைஞர் அதே இடத்தில் இறந்தனர்.

இறந்த இளைஞர்கள் சரவெட்டி, சாவகச்சேரி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அறியப்படுகின்றது. (ச-160)


## கேள்வி அறிவித்தல், 1989

## நகரசபை — வவுனியா

01-01-89 முதல் 31-12-89 வரைக்கான காலப்பகுதிக்கு கீழ்க் காணும் குத்தகைக்கான கேள்விகள் 15 12 88 ஆம் திகதி முற்பகல் 10 00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்களை 14-12 88 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டவாறு படிவக் கட்டணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்.

| குத்தகையின் விபரம் | ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
| --- | --- | --- | --- |
| 01. மீன் சந்தை (நவீன சந்தைக்கருகில்) | 7260/- | 300/- | 150/- |
| 02. சரப்பன் ஈட்டுச் சந்தியில் உள்ள ஆட்டிறைச்சிக் கடை | 10211/- | 2000/- | 200/- |
| 03. கரப்பன்காட்டுச் சந்தியில் உள்ள மாட்டிறைச்சிக் கடை | 14220/- | 2000/- | 200/- |

இ. இராமலிங்கம்,
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா,
1-12 88. (C-869)



+
J.M.J
உங்கள் பயண அமைப்பாளர்




✶ கனடா ✶ ஜெர்மனி ✶ பிரான்ஸ்
✶ சுவிஸ் ✶ இத்தாலி

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றனர் என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம். எமது குழுக்கள் பிரதியாரமும்

**கனடா, ஜெர்மனி, பிரான்ஸ்**
ஆகிய நாடுகளுக்கு
எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.
இது ஓர் அரிய சந்தர்ப்பம்

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன் அழைக்கின்றேன்

● முக்கிய குறிப்பு:
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்

**S. P. ANTON**

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம். (C/854)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
விழையார் விழையப் படுப
பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

**பொருள்:**
(தவறு செய்த போதிலும்) பழகிய நண்பரிடத்தில் தம் உரிமைப் பண்பில் இருந்து மாறாதவர், தம் பகைவராலும் விரும்பப் படுதற்குரிய சிறப்பை அடைவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24C05
யாழ்ப்பாணம். 22073
05-12-1988 த. பெ. இல 23


## தேர்தல்களை நோக்கி...

நாடாளுமன்றம் இம்மாதம் இருபதாம் திகதி கலைக்கப்படும். பொதுத் தேர்தல் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடத்தப்படும் புதிய நாடாளுமன்றம் 1989 மார்ச் 9 ஆம் திகதி கூடும்.

ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன, கடந்த சனிக்கிழமை நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இந்தத் திகதி விவரங்களை வெளியிட்டார்.

திரு. ஜெயவர்த்தன தலைமையிலான பதினொரு வருடத் தொடர் ஆட்சி புளித்துப் போன நிலையில், கொடிய ஆட்சியாக உருவெடுத்த நிலையில், கெடுபிடி ஆட்சியாக மாறிய நிலையில், ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெற வேண்டும் என்று மக்கள் எப்போதோ விரும்பினர்.

ஆனல் இப்போது தான் அந்த விருப்பம் நிறைவேற வழி செய்திருக்கிறார் திரு. ஜெயவர்த்தன

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று முதலில் சுதந்திரக் கட்சியும் பின்னர் ஜனதா விமுக்தி பெரமுனையும் (ஜே.வி.பியும்) குரல் கொடுத்து வந்தன.

ஆகக் கடைசியாக ஜே வி.பி கொடுத்து வரும் ஆக்கினை, தேர்தல்கள் இரண்டையும் நடத்தியாக வேண்டும் என்ற ஒரு மனநிலைக்கு திரு. ஜெயவர்த்தனவைத் தள்ளியிருக்கக்கூடும்.

நாற்பத்தைந்து வருட கால அரசியல் வாழ்வின் பின்னர், அதனைத் துறந்துவிட அவர் எடுத்துக்கொண்ட முடிவும் மனமாற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம்

எவ்வாறாயினும் எவரது நெருக்குதலாலோ அல்லது அழுத்தத்தினலோ அன்றித் தமது சுய விருப்பத்தின் பேரிலேயே தாம் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடிவு செய்ததாகத் திரு. ஜெயவர்த்தன காட்டி இருக்கிறார்.

புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி தனக்குரிய முறையிலான அரசாங்கம் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும். அதற்கு உதவுமுகமாகவே நான் நாடாளுமன்றத்தைக் கலைத்திருக்கிறேன். இவ்வாறு அவர் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சுதந்திரக்கட்சி, ஜே வி.பி., மகா சங்கத்தினர், மற்றும் மக்கள் இயக்கங்கள் பலவும் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது குறித்து திரு. ஜே. ஆரின் உரையில் எதுவுமில்லை. உரிய காலத்துக்கு எட்டு மாதங்களுக்கு முன்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாகச் சற்றுக் கவலை தொனிக்கக் கூறியுள்ளார்

பிறர் நெருக்குதலுக்கு விட்டுக்கொடுப்பதில்லை என்ற நீண்ட கால நடைமுறைப் போக்கை, கடைசி நேரத்திலும் தாம் கைவிடவில்லை என்றும் அவர் காட்டியுள்ளார்.

அவர் எப்படியோ, ஜனாதிபதித்தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலும் நடக்க இருப்பதை, ஜனநாயகத்தை நேசிக்கும் எவரும் ஆதரிக்கவே செய்வர்.

ஆனல் இரண்டு தேர்தல்களும், சிர்கேடு, மோசடி என்பன இல்லாமல், பயமுறுத்தல் பங்கு கொள்ளாத, ஆயுதமுனையில் அல்லாத, சுயேச்சையான, சுதந்திரமான தேர்தல்களாக நடக்க வேண்டும். மக்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் ஓர் அரசைத் தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பும், வசதிகளும் செய்யப்பட வேண்டும்.

தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு, சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்று நியமிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் இரண்டு தேர்தல்களும் சுதந்திரமாக, சீராக நடக்கும் என்று நம்புவோமாக — எதிர்பார்ப்போமாக.

எனினும், சுதந்திரமான தேர்தல் நடப்பதாயின், நாட்டில் அமைதி அத்தியாவசியம். அந்த அமைதியை உருவாக்குவதற்கும் இப்போதைய ஜனாதிபதியே நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அவர் தமது கடமையில் இருந்து தவறியவர் ஆவார்.

அந்த அமைதியை உருவாக்க அவரும், ஜே. வி. பியினரும் விட்டுக் கொடுத்துச் சமரசத்துக்கு வரவேண்டும் அமைதியை உருவாக்குவதில் இருதரப்பினருக்கும் சமபங்கு உண்டு.

### ஒட்டேகாவுக்கு விஸா

நிக்கரகுவா அதிபர் ஜெனரல் ஒட்டேகா இன்று திங்கட்கிழமை ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றவிருக்கிறார்.

இதற்காக ஜெனரல் ஒட்டேகா நியூயார்க் விஜயம் செய்ய அமெரிக்க அரசு விஸா வழங்கியுள்ளது. (எ)

# நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் பேச்சுக்கள் தோல்வியில் முடிவு!

லண்டன், டிச 4

நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்குவது பற்றிய பேச்சுக்கள் முறிவடைந்துவிட்டன என்று தென் ஆபிரிக்க அரசு நேற்று அறிவித்தது

தென்மேற்கு ஆபிரிக்க நாடான நமீபியா தற்சமயம் தென் ஆபிரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அங்கோலாவில் உள்ள கியூபன் படைகள் விலக்கப்பட்டால், நமீபியாவில் உள்ள தனது படைகளை விலக்கி அந்நாட்டுக்குச் சுதந்திரம் வழங்க தென் ஆபிரிக்க அரசு முன் வந்தது.

ஜெனிவா, லண்டன், நியூயார்க் ஆகிய இடங்களில் இது சம்பந்தமான பேச்சுக்கள் முதலில் நடந்தன, அப்போது உடன்பாடு ஒன்று காணப்பட்டது

இறுதிப் பேச்சுக்கள் கடந்த வாரம் கொங்கோ தலைநகரான பிறேசவில்லில் நடந்தன.

அப்போது உடன்பாடு கைச்சாத்திடப்படுவதில் புதிய சிக்கல் ஒன்று ஏற்பட்டது

அங்கோலாவில் இருந்து கியூபன் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்படுவதைக் கண்காணிப்புச் செய்ய ஒரு குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று தென் ஆபிரிக்க அரசு வற்புறுத்தியது

இதை அங்கோலாவும் கியூபாவும் ஏற்றுக் கொள்ளவில்லை

"இதன் காரணமாக பேச்சுக்கள் முறிவடைந்தன; உடன்பாடு கைச்சாத்தாகவில்லை எமது தூதுக்குழு நாடு திரும்பிக்கொண்டிருக்கிறது" - இப்படி தென் ஆபிரிக்க வெளிவுறவு அமைச்சர் பிக் போத்தா தெரிவித்தார். (எ)

# ஜெயலலிதா ஒரு காகிதக் கோட்டை தேர்தல் சூறாவளியில் பறந்து விடும்

## வீரப்பன் இண்டல்

கோவை, டிச 05

"தமிழ் நாட்டில் மீண்டும் ஜானகி அம்மாள் தலைமையில் ஆட்சி அமைப்போம்" என்று முன்னாள் அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் கூறினார்.

### பொதுக்கூட்டம்

அ தி.மு கவின 17ஆவது ஆண்டு தொடக்க விழா ஜானகி அம்மாள் அணியின் சார்பில் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி கோவை ராஜவீதி தேர்நிலை திடலில் பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு முன்னாள் எம். எல் ஏ. நெகமம் கே வி. சந்தசாமி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் பேசினார் அப்போது அவர் கூறியதாவது;-

### நம்பிக்கை

'நம்முடைய கழகத்தின துரோகிகள் பிளந்து விட்ட பிறகு கடந்த பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி நடந்த பொதுக் கூட்டத்திலும் 13 ஆம் திகதி நடந்த உண்ணாவிரதத்திற்கும்கிடைத்த வெற்றி நம்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையினை காட்டுகிறது.

புரட்சித் தலைவரின் ஆற்றல் மிக்க கட்சியினை அழிப்பதற்கு எந்தவித பெண்மணியும் கொம்பனும் பிறந்து விடவில்லை என்பதை அறிய முடிகிறது. தலைவர்களை வைத்துத்தான் இயக்கங்கள் வளர்ந்தது உண்டு. ஆனல் தொண்டர்களை வைத்து வளர்ந்தது இந்த அ தி மு கழகம். இது புரட்சித் தலைவரால் உருவாகியது.

### மீண்டும் வெற்றி பெறுவோம்

நம்மிடையே ஏற்பட்ட பிளவை இந்த சூழ்நிலையை தமக்குச் சாதகமாக பயன்படுத்த நினைத்துக்கொண்டுஎதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன காங்கிரசும், தி.மு.கவும்.

அவர்களுக்கு நான் சொல்வேன். ஏமாந்து தான் போவீர்கள். 1974 இல் இடைத்தேர்தலில் நாம் பெற்ற அதேமாதிரி தான் வெற்றியை இனியும் பெறப்போகிறோம்.

### ஒரே தலைவி

இன்றைக்கு எங்கள் ஒரே தலைவி ஜானகி அம்மாள் தான், அவர்கள் தான் கருத்து சொல்ல உரிமை உண்டு,

அவர் எந்த தலைவரிடமும் சென்று பேச முடியும் யாரிடமும் எந்த மொழியிலும் பேச முடியும் அந்த ஆற்றல் திறமை அவருக்கு உண்டு

"பிளவு பட்டுவிட்டீர்கள், எனவே காங்கிரஸ் வந்துவிடும் தி மு .க வந்துவிடும்" என்பவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். சூழ்ச்சிகளுக்கு நாங்கள் பயப்பட மாட்டோம். பிளவுபட்டு விட்டோம் என்று எண்ணி இடையிலே நுழைய நினைத்தால், அது ஆப்பை அசைத்த குரங்கு போல தான் அமையும்.

### கூட்டு சேர தூது

இன்றைக்கு காங்கிரசோடு கூட்டணி சேரத் தூது செல்பவர்களை நான் கேட்கிறேன்;

தமிழக முதல்வர் ஜானகி அம்மாள் என்று சொல்வார்களா? காங்கிரஸ் சொல்லுமா? ரகசியமாக பேரம் பேசுகிறவர்களை பற்றிநமக்கு கவலையில்லை.

கஷ்டம் வந்தபோதெல்லாம விட்டு விட்டு துரோகம் செய்து விட்டு சென்று இப்போது நிழல்தேடி, பாவமன்னிப்பு கேட்டு வருகிறீர்களே எங்களை யாரிடம் அடகு வைக்க முயற்சி செய்கிறீர்கள்.

முன்பு தி.மு.க. வை வென்றோம் மீண்டும் வென்று காட்டுவோம் உங்களைப்போல் துரோக கும்பல் குறுக்கே வராமல் இருந்தால்.

### காகிதக் கோட்டை

ஜெயலலிதா ஒரு காகிதக் கோட்டை மணல் கோட்டை, சூறாவளி அடித்தால் பறந்து விடும்.

தமிழக முதல்வராக யார் வருவது என்பது முக்கியமல்ல யார் வரக்கூடாது என்பதே முக்கியம்

இவ்வாறு ஆர். எம். வீரப்பன் பேசினார். (எ-4)

# வளைகுடாவில் புதிய யுத்தம்! வெட்டுக்கிளி படையெடுப்பை எதிர்த்து!!

தெஹ்ரான், டிச. 4

வளைகுடா நாடுகள் இப்போது வெட்டுக்கிளிகளுக்கு எதிராக யுத்தம் ஒன்றை நடத்த திட்டங்கள் தீட்டிவருகின்றன.

ஆபிரிக்கக் கண்டத்தில் உணவு உற்பத்தித் துறையில் பெரும் அழிவை வெட்டுக்கிளிகள் ஏற்படுத்தி உள்ளன.

பின்னர் நைல்நதி ஓரத்தில் இருந்து அத்திலாந்திக் கரையோரமாக மொரொக்கோ வரையான குறைந்தது 1 கோடி ஹெக்டர் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட உணவுப் பயிர்களை இவ் வெட்டுக்கிளிகள் அழித்தன

இப்போது வெட்டுக்கிளிகள் கோடிக்கணக்கில் பெருகி வளைகுடா நாடுகளை நோக்கிப் படை எடுத்துள்ளன.

பெரும்பாலும் பாலைவனப் பிரதேசங்களைக் கொண்ட வளைகுடா நாடுகளில் காணப்படும் பச்சைப்பசேல் பயிர்களை இவை முற்றாக அழித்துவிடும் அபாயம் ஏற்பட்டு இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சவூதி அரேபியாவின் மேற்குப்பகுதியில் வெட்டுக்கிளிகள் படையெடுத்துள்ளது.

குவைத், பஹ்ரைன், கட்டார் ஆகிய நாடுகளுக்கும் வெட்டுக்கிளிகள் படையெடுக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன.

கடந்த 25 ஆண்டுகளிலும் பார்க்க மோசமான ஆபத்தை வளைகுடா நாடுகள் எதிர்நோக்கியுள்ளன.

வெட்டுக்கிளிகளின் படை எடுப்பை முறியடித்து உணவுப்பயிர்களை காப்பாற்றும் அவசர நடவடிக்கைகளை வளைகுடா நாடுகள் தயாரித்து வருகின்றன என்று டி பி ஏ செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது. (எ)

### வெளியுலகில்

# கோர்பச்சேவ் ஐ. நா.வில் உரை

ஐ நா, டிச 4

வருகிற புதன்கிழமை ஐநாவில் சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ் உரை நிகழ்த்தவிருக்கிறார்.

பேச்சு நிகழ்த்துவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னதாக திரு. கோர்பச்சேவ் ஐ நா. கூட்டத்தைச் சென்றடைவார்.

ஐ.நா பொதுச்சபைத் தலைவர் டான்ரே சுபுட்டோ, பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் ஆகியோரையும் திரு. கோர்பச்சேவ் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார். (எ)

### 1980 ஆம் ஆண்டுக்குப்பின்:

# கல்வியிலும் ஒழுக்கத்திலும் மாணவர் முன்னேறி உள்ளனர்

### பரிசளிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம் டிச 5

"நாம் செய்த ஆய்வு ஒன்றின்படி 1980 ஆம் ஆண்டுக்குப்பின் எமது மாணவர்கள் இவ்வாண்டுக்கு முன்னிருந்த மாணவர்களை விட நடத்தையிலும் கல்வியிலும் முன்னேறி உள்ளனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுது யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார்.

பரிசளிப்பு விழாவுக்கு கல்லூரியின் அதிபர் திரு எஸ் வி. மகேஷ்வேலு தலைமை வகித்தார்.

கௌரவ விருந்தினராக இலங்கையிலுள்ள ஐ நா. வின அகதிகள் விவகாரங்களுக்குப் பொறுப்பான திட்ட அலுவலகர் திரு பேர்ஞட்டையர் கலந்து கொண்டார்.

திரு. கந்தசாமி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது. "1983 ஆம் ஆண்டிலிருந்து எமது மாணவர்கள் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகினர்.

பல அனர்த்தங்கள் மத்தியிலும் அவர்கள் தமது மன உறுதியைத் தளரவிடவில்லை.

எமது சேவை மனப்பான்மை மிகுந்த ஆசிரியர்களும் அதிபர்களும் தமது கடமைகளைச்சிறப்பாக ஆற்றியுள்ளனர்.

கல்வியின் நோக்கம் பரீட்சைகளில் சித்தி பெறுவதல்ல.

எமது மாணவர்கள் சிறந்த பிரஜைகளாக உருவாக்கப்பட வேண்டும்

அவர்கள் நாட்டுக்கு உபயோகமான தொழில் துறைகளில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

புத்தகப் படிப்புடன் தொழில் நுட்ப அறிவும் பெற்றவனே முழுமையான கல்வியைப் பெற்றவனாவான்.

புத்தகப் பூச்சிகளாக மாணவர்கள் இருக்கக் கூடாது.

இப்படி அவர் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. மகேஷ்வேலு தனது உரையில் "கடைசியாக நடைபெற்ற ஜீ சி ஈ. (சாதாரணம்) பரீட்சையில் இக் கல்லூரியின் சரித்திரத்தில் முதல் முறையாக நடராஜா ரவிச்சந்திரன் என்னும் மாணவன் எட்டுப்பாடங்களிலும் அதி திறமைச் சித்தி பெற்று கல்லூரிக்குப் புகழைத் தேடித் தந்துள்ளார்.

இத்துடன் மூன்று மாணவர்கள் ஏழு பாடங்களில் அதி திறமைச்சித்தியும்இருமாணவர்கள் 6 பாடங்களில் அதிதிறமைச் சித்தியும் பெற்றுள்ளது எமக்கு உற்சாகத்தை அளிக்கிறது என்றார் (ஓ ச)

### இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

# 4 இடங்களிலும் முதலிடம்

யாழ்ப்பாணம், டிச. 5

அண்மையில் நடைபெற்ற நல்லூர் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான இசை நாடகப் போட்டிகளில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை பங்குபற்றிய நான்கு நிகழ்ச்சிகளிலும் முதலிடங்களைப் பெற்றது.

இக்கப் போட்டிகள் நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு கட் சிவ நாயகமூர்த்தி தலைமையில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

ஆரம்பப் பிரிவுக்கான கர்நாடக இசை (தனி) செல்வி க. சியாமளாங்கி கர்நாடக இசை (குழு) கிராமிய நடனம் (தனி) [illegible] சிறுவர் நாடகம் [illegible] யவையே இந்த நான்கு நிகழ்ச்சிகளும் ஆகும்.

### முல்லைத்தீவில்

ரெலோ அலுவலகம்

முல்லைத்தீவு கடைவீதியில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதே வீதியில் ஈ பி.ஆர் எல்.எவ். காரியாலயமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### அகண்ட நாமபஜனை

நல்லலஷ்மி குரு பூசையையொட்டி நாளை 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி இல்லத்தில் அகண்ட நாம பஜனை நடைபெறவுள்ளது.

அன்று காலை 5.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பஜனை, மங்கள ஆராத்தி, நினைவுப் பேச்சுக்கள் எனபன இடம் பெறும். (சி)

### கோவிற்புலம் ஸ்ரீ அண்ணமார் சிவன் ஆலயம்

தெல்லிப்பழை கோவிற்புலம் ஸ்ரீ அண்ணமார் சிவன ஆலய பரிபாலனசபைப்பொதுக் கூட்டத்தில் பினவருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்:- திரு. குமுருகையா (ஆலய பூசகர் உப தலைவர்:- திரு: சி.கதிரவேல், செயலாளர்,- திரு க. துரைசிங்கம், பொருளாளர் திரு. க. சின்னராசா,

# முல்லைத்தீவுப் பகுதி வீதிகளின் அவல நிலை

ஒட்டுசுட்டான். டிச 5

முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள பல பகிரங்க வீதிகள் பாதைகள் உடைந்தும் சிதைந்தும் போயுள்ளன.

இதனல் வாகனங்கள் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில போக்குவரத்தை மேற் கொள்ளுகின்றன

முல்லைத்தீவு - புளியங்குளம், முல்லைத்தீவு பரந்தன், புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி ஆகிய வீதிகள் பாரிய குன்றுங்குழிகளாகக் காணப்படுகின்றன.

வீதியோரம் புதர் பற்றைகள் வளர்ந்து விட்டன

மேற்கூறப்பட்ட பாதையால் போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் வீதிகளின் சீர்கேட்டால் வீதியை விட்டு விலகி வீதியோரங்களிலேயே ஓடுகின்றன

இவைகளை அதிகாரிகள் கவனிப்பார்களா? என மக்கள் கேட்கின்றனர். (ஓ - 113)

### ஸ்ரீ ல. சு. கட்சிக்கு எதிரான

# சுவரொட்டிகளை அகற்றவும் இல்லையேல் சட்ட நடவடிக்கை!

கொழும்பு. டிச 5

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைத் தாக்கி ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்ற நடவடிக்கை எடுங்கள்; இல்லையேல் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க நேரிடும்—

இப்படி பொலீஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் சுதந்திரக் கட்சியின் பிரதம தேர்தல் அமைப்பாளர் டாக்டர் மங்கிரத்வத்தை தெரிவித்திருக்கிறார்.

இச்சுவரொட்டிகள் தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணானவை என்று சட்டமா அதிபர் அறிவித்ததையும் அவர் பொலீஸ் மா அதிபருக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறார். (ஓ எ)

### ஜனாதிபதித் தேர்தலில்

# வட - கிழக்குப் பகுதிகளில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், டிச 5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வட - கிழக்கு மாகாணங்களில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்

இத்தேர்தல் தொடர்பான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் சகல பிரதி தேர்தல் ஆணையாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

கொத்தணி வாக்களிப்பு நிலயத்தின் பிரகாரம் 2-4 வரையிலான வாக்குச்சாவடிகள் ஒரே இடத்தில் தனித்தனியாக அமையும்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா - 55 பட்டிருப்பு -48 மட்டக்களப்பு - 68 என்ற எண்ணிக்கையிலுள்ள வாக்குச்சாவடிகள் முறையே 22 20, 36 கொத்தணி நிலையங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஓ-ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாஸ் படை மருந்து

இப்படைமருந்து சொறி, சிரங்கு, சக்கூஸ்பற்று, தேமல், புண், ஊறல்கள் முதலிய சகல விதமான படைகளையும் மாற்றும்

( வெளிப்பிரயோகம் )

கிடைக்கும் இடம்:
க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.


# உதயன்

05 - 12 - 1988 திங்கட்கிழமை


மதுரம், குருகுதலம், திருச்சிறுப்பள்ளி

தடிமல், தலையிடி, வாதம் மற்றும் உளைவு. நோ. நாரிப்பிடிப்பு முதலிய வியாதிகளுக்குக் கைகண்டது.

கிடைக்கும் இடம்.
க.செ. கைலாசம்பிள்ளைஅன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## மாகாண சபை அங்குரார்ப்பணம் இன்று

கொழும்பு, டிச. 5

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று திங்கள் காலை 11 மணிக்கு திருமலை நகர மண்டபத்தில் நடைபெறும் காலை பத்து மணிக்கு நகரசபை மண்டபத்தில் புதிய உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வர்.

இதனிடையில் —

அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று காங்கிரஸ் தலைவர் சேகு இஸ்ஸதீன் தெரிவித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

"இக் கூட்டங்களில் கலந்துகொள்வதா என்பது பற்றி முதலில் காங்கிரஸ் முடிவுசெய்ய வேண்டும்

ஜனாதிபதி வேட்பாளருடன் காங்கிரஸ் பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதால் இதில் கவனஞ் செலுத்த முடியவில்லை"

— இப்படி ஜனாப் சேகு இஸ்ஸதீன் தெரிவித்தார்.

முதலமைச்சர் திரு அ. வரதராஜப் பெருமாள் வருகிற வெள்ளிக்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் விசுவாசப் பிரமாணஞ் செய்துகொள்வார் என்றும் —

அதன்பின்னர் அமைச்சரவை உறுப்பினர்களுக்கு இம்மாதம் 10ஆம் திகதி திருமலையில் வைத்து ஆளுநர் நளின் செனவிரத்ன விசுவாசப் பிரமாணஞ் செய்து வைப்பார் என்றும் அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது. (உ-எ)

## அமைச்சர்கள் விவரம்

கொழும்பு, டிச. 5

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அமைச்சராக அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஜனாப் முகமது அபுயூசுப் என்பவர் நியமிக்கப்படவிருக்கிறார்

44 வயது நிரம்பிய இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரும், கிழக்கில் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகரும் ஆவார்.

ஈ. பி ஆர். எல். எப் சார்பில் இவர் அமைச்சர் நியமனத்தைப் பெறுகிறார்,

ஈ என். டி. எல். எப். சார்பில் திரு. சி. எம். கணேசலிங்கம் அமைச்சராக நியமிக்கப்படுகிறார். திருமலை உதவி அரச அதிபராக முன்னர் இவர் பணியாற்றினார்.

ஏற்கனவே திரு பெரிய தம்பி கிருபாகரன், திரு. தயான் ஜெயதிலக டி சில்வா ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

இதனிடையில் —

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் பலனளிக்காததால், தனது ஆதரவாளர்களில் ஒருவரை முஸ்லிம் சார்பில் அமைச்சராக நியமிக்க ஈ. பி. ஆர். எல் எவ். இயக்கம் முடிவு செய்திருப்பதாக இயக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

"நான்கு தினங்களுக்கு முன்னர் ஈ பி ஆர் எல். எப். தலைவர்கள் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

கூட்டு அரசாங்கத்தில் சேர்ந்துகொள்ள —

கொள்கையளவிலாவது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்குத் தனி மாகாணம் அமைப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியது."

— இப்படி காங்கிரஸ் தலைவர் சேகு இஸ்ஸதீன் கூறியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## கூட்டணிக்கு இடமளிக்க ஈ. பி. ஆர். எல். எவ். தயார்

கொழும்பு, டிச 5

மாகாண சபையில் பங்கு கொள்ளவும் இணைந்த தமிழ் மாகாண அரசியலில் பிரவேசிக்கவும் தமிழர் விடுதலைக் கூட்டணி விரும்பினால் அதற்கும் ஈ பி. ஆர். எல். எவ். இயக்கம் இடமளிக்கும்.

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்க அரசியல் குழு உறுப்பினர் திரு. பி. எம். பி. சேகர் முன் கண்டவாறு தெரிவித்தார் என்று சண்டே ஒப்சேவர் செய்திவெளியிட்டிருக்கிறது

"வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வெற்றியாக முடியும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. அனுபவம் வாய்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரே அது குறித்து சந்தேகப்பட்டனர்.

எமது பிரதான செயற்பாடு இனி புனர்வாழ்வும் புனரமைப்புமாகவே இருக்கும்.

தொண்டர் நிறுவனங்களின் உதவி, வெளிநாட்டு உதவி ஆகியவற்றை நாம் இதற்காகத் திரட்டுவோம்.

பாரம் பரியமாக வடக்கு, கிழக்கில் வசித்து வந்த சிங்களவர்களுக்கு மறு வாழ்வளிக்கப்படும்.

எல்லாத்தமிழ் போராளிகளும் இணைந்துசெயல்பட கதவுகள் திறந்தே இருக்கும்

— இப்படி திரு சேகர் தெரிவித்தார் என்று சண்டே ஒப்சேவர் செய்தி கூறுகிறது. (உ-எ)

## சுன்னாகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் தெரிவித்தன.

சுன்னாகத்தில் இயங்கி வரும் ஜெனரேட்டர்களுக்குத் தேவையான "டீசல்" கையிருப்பு குறைவாக இருந்தமையினால் மின் விநியோகம் முற்றாகத் தடைப்படக்கூடிய அபாயம் இருந்தது

எனினும் நேற்று முன்தினம் ரயில் மூலம் "டீசல்" கொண்டுவரப்பட்டுள்ளமையினால் தற்போது உள்ள நேர ஒழுங்கின் படி மின்சார விநியோகத்தை தொடர்ந்து மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் (உ-ஒ 5)

## கொழும்பு பயணிகளுக்கு சோதனை மேல் சோதனை!

யாழ்ப்பாணம், டிச. 5

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதும், இங்கிருந்து அங்கு செல்வதும் இப்போது பெரும் சிரமமும், தொல்லையும் உயிராபத்தும் நிறைந்த பயணமாகி விட்டது

ஒருமுறை பயணம் செய்துவிட்டால் போதும். சோதனை மேல் சோதனை போதுமடா சாமி! — என்று சொல்லுமளவுக்கு அவலம் நிறைந்ததாகிவிட்டது

யாழ் — கொழும்பு வாகனங்கள் தாக்கப்படுகின்றன. துப்பாக்கி வேட்டுக்கள் அவை மீது தீர்க்கப்படுகின்றன.

ஆகக் கடைசியாக, வவுனியாவுக்கு அப்பால் நொச்சிகாமம் பகுதியில் யாழ் — கொழும்பு வாகனங்கள் மரக்குற்றிகள் போட்டு மறிக்கப்படுகின்றன.

சனிக்கிழமை கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த பயணிகள் தாங்களே குற்றிகளை அகற்றிவிட்டுப் பயணத்தைத் தொடர வேண்டியதாயிற்று.

சாரதி விடயமறிந்து பஸ்ஸை மரக்குற்றிகள் போடப்பட்ட இடத்திற்கு அப்பால் தொலைவில் வாகனத்தை நிறுத்தினார் பொலீஸ் நிலையம் சென்று தகவல் தெரிவித்தார். பொலீஸார் பாதுகாப்புக்கு வந்து உதவினர் பயணிகள் சேர்ந்து மரக்குற்றிகளை அகற்றிவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

அந்த பஸ்ஸில் வந்த பயணி ஒருவர் பின்வருமாறு அலுத்துக்கொண்டார்.

"வவுனியாவுக்கு அப்பால் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பயணம் செய்ய வேண்டி உள்ளது இப்போது மரக்குற்றித் தொல்லையும் சேர்ந்து கொண்டது வவுனியாவுக்கு இந்தப் பக்கம் கண்டகண்ட இடமெல்லாம் சோதனைக்காக இறங்கி ஏற வேண்டி உள்ளது சிலவேளை ஏனடா இந்தப் பயணம் என்று நினைக்கவும் வைக்கிறது" —என்றார் (அ 10)

## தன்னைக் கொல்ல முயற்சி நடப்பதாக ரூனி புகார்

கொழும்பு, டிச 5

தன்னைக் கொல்ல முயற்சி நடப்பதாக முன்னாள் நிதி அமைச்சர் ரூனி டி மெல் பொலீஸாருக்கு முறையிட்டிருக்கிறார்.

முன்னணி அரசியல்வாதி ஒருவரின் நெருங்கிய கூட்டாளி ஒருவரும் இன்னொருவரும் சேர்ந்து இம்முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

அந்த இரண்டு பேரின் பெயர்களையும் திரு. ரூனி டி மெல் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

"இக்கொலை முயற்சி பற்றி முன்னாள் சுதந்திரக்கட்சி அரசியல்வாதி ஒருவரின் மெய்க்காப்பாளர் மூலமே அறிந்தேன்.

காலிமுகக் கடற்கரையில் காலையில் நான் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் சமயம் என்னைக் கொல்லத் திட்டமிடப்பட்டுள்ளது

மத்துகம சளுத்துறை ஆகிய இடங்களில் நான் கூட்டங்களில் பேசச் செல்லும்சமயம் குண்டு வீசித் தாக்கவும் தென்பகுதி அரசியல்வாதி ஒருவர் திட்டமிட்டிருக்கிறார்".

—இப்படி திரு. ரூனி டி மெல் கூறியிருக்கிறார். (உ-எ)

## ஜனாதிபதி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யது அவசியம் இதற்காகவே நாடாளுமன்றத்தைக் கலைக்கும்தினத்தை ஜனாதிபதித் தேர்தல் தினத்திற்கு அடுத்த நாளாக திரு. ஜெயவர்த்தனா தேர்ந்தெடுத்தார் என்று அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## புன்னாலை,..

(1ம்பக்கத் தொடர்ச்சி)

னர் காலஞ்சென்றவரும் ஓடிய பொழுது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணை நேற்று யாழ். பொலிஸ் பிரிவில் நடைபெற்றது. (ஒ-10)

## உமா - சிறிமா பேச்சு!

புளொட் இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரன் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவரின் இல்லத்தில் சந்தித்து சுமார் 90 நிமிடங்கள் பேசினார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஜனநாயக மக்கள்முன்னணி தயாரித்த திட்டம் பற்றி திருமதி பண்டாரநாயக்கா திரு. உமாமகேஸ்வரனுக்கு விளக்கினார். (உ-எ)

## ஜே.வி பி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்காவைப் பல தடவைகள் சந்தித்துப் பேசினர்.

இப்பேச்சுக்களில் மத குருமார்கள், மனித உரிமை நிறுவனங்கள், அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் சம்மேளனம் ஆகியவற்றின்பிரதிநிதிகள் சம்பந்தப்பட்டுள்ளனர்!

ஜனநாயக மக்கள் அணியில் சேர்வதற்குப் பல நிபந்தனைகளை ஜே.வி. பி.வற்புறுத்துவதாகக் கூறப்படுகிறது.

★ அவசரகால நிலை நீக்கப்பட்டு, எதிர்க்கட்சிகள் பங்குகொள்ளும் காபந்து அமைச்சரவை அமைக்கப்பட வேண்டும்

★ ஜனாதிபதி தேர்தலுடன் பொதுத் தேர்தலும் நடத்தப்படவேண்டும்.

— இந்த நிபந்தனைகளை ஜே. வி. பி. வற்புறுத்தி வருகிறது

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படாத நிலையில் தாங்கள் பகிரங்கமாக வெளிவருவது உயிருக்கே ஆபத்தாகமுடியும் என்று ஜே வி பியினர் கருதுகின்றனர். (உ-எ)

## தெற்கில் நேற்று 6 பேர் பலி!

கொழும்பு, டிச 5

நாட்டின் தென் பகுதியில் கடந்த 24 மணித்தியாலத்தில் 6 பேர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டனர்.

கம்புறுபிட்டியாவில் இனந்தெரியாதோர். வீடு ஒன்றிற்குள் புகுந்து அங்கிருந்த தாயையும் மகளையும் வெளியே இழுத்து வந்து சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

கதிர்காமத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் ஜீப்பில் சென்று கொண்டிருந்த ஏழு இலங்கை இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்தனர்

மொனறாகலை, சியம்பலாண்டுவையில் இடம்பெற்ற தாக்குதலில் சிலர் உயிரிழந்தனர். (உ-எ)

## முதல் இன்னிங்ஸில் இந்தியா முன்னணியில்

ஹைதரபாத் டிச 5

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது இறுதி டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாவது நாளான நேற்று நியூஸிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 65 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

தேனீர் இடைவேளைக்கு 45 நிமிடங்கள் முன்னதாக இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸை முடித்துக் கொண்டது.

நேற்றைய ஆட்டத்தில் அஸாருதீன் 81 ஓட்டங்கள் எடுத்தது சிறப்பம்சமாகும்.

முதலாவதுஇன்னிங்ஸ் ஓட்ட விவரம்:-

★நியூஸிலாந்து - 254

★இந்தியா - 358

(இ-எ)

## அரச அதிபர்களாக இராணுவ அதிகாரிகள்?

கொழும்பு டிச 5

நாட்டின் தென்பகுதியில் வேலைக்குச் செல்லாதிருக்கும் அரச அதிபர்களுக்குப் பதிலாக இராணுவ அதிகாரிகளை அரசாங்க அதிபர்களாக நியமிக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

இதனிடையில் தீவிரவாதிகளின் பயமுறுத்தல் காரணமாக வேலைக்குச் செல்லாதிருக்கும் அரசு உயர்அதிகாரிகள், அரச ஊழியர்களைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்து பணிபுரிய வைப்பதில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

இதுவரை 200 அரசு ஊழியர்களும், பதினைந்து திணைக்களத் தலைவர்களும் இப்படியான 'தடுப்புக்காவல்' உத்தரவின்கீழ் பணிபுரிந்துவருகின்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)

## தமிழ் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் எண்ணிக்கையான இலங்கை அகதிகள் நாடு திரும்பி இருப்பதுடன், அவர்கள் முன்னைய இருப்பிடங்களில் அமர்த்தப்பட்டுப் புனர் வாழ்வளிக்கப்படும். இப்பகுதியின் புனர் வாழ்வுக்கு உறுதியளித்தபடி 25 கோடி ரூபாவை இந்தியா விரைவில் வழங்கும்.

இப்படி திரு டிக்ஸிற் வெளிநாட்டுச் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

இதனிடையில் திரு. டிக்ஸிற் சட்டமா அதிபரை எதற்காகச் சந்தித்துப் பேசினார் என்பது குறித்து விளக்கி இந்தியத் தூதரகம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது

'இந்திய — இலங்கை ஒப்பந்தப்படி தமிழ் மொழிச் சட்டத்தைக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்டறியும்படி இந்தியா தனது தூதர் டிக்ஸிற்றைக் கேட்டிருந்தது.

'அது பற்றிச் சட்டமா அதிபரிடம் கேட்டறியும்படி இலங்கை அரசு தூதருக்குத் தெரிவித்தது.

அதைத் தொடர்ந்தே தூதர் சட்டமா அதிபரைச் சந்தித்தார்.

இது இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகாது'— (ம)

## புதிய பீடாதிபதி

கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தராக இன்று திங்கள் முதல் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் பதவி ஏற்கிறார்

சட்டத்துறைப்பீடாதிபதியாக இவர் தற்சமயம் பணிபுரிந்து வருகிறார். (உ-எ)

## பொலீஸ்....

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிலையக்கட்டடம், ரூபவாஹினிக்கட்டடம்ஆகியவற்றை காவல் புரிந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தற்போது இந்த ஆதிரப்படையினர் ஜனாதிபதி. பிரதமர் மற்றும் மிகமுக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றன'. (உ-எ)


சாங்கேசன்துறை

### நா. கருணனந்தசிவம்

(ஆசிரியர் மறைவு)

காங்கேசன்துறையைச் சேர்ந்தவரும் நடேஸ்வராக்கல்லூரி ஆசிரியருமான நாகமுத்து கருணனந்தசிவம் (பி. ஏ) அகால மரணமடைந்துள்ளார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் திங்கட்கிழமை (இன்று) 5-12-1988 காலை 10 மணிக்கு நடைபெறும்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

(7799)

## மரண அறிவித்தல்கள்

### திரு. தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த திரு. த. கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்) காலமாகி விட்டார். அன்னார் பொன்மலரின் அன்புக் கணவரும், இலக்குமிதேவி, நிர்மலாதேவி (U.K.), இராசேந்திரம் (அப்பு) [கனடா], குலேந்திரன், பாலேந்திரன் (U.K.) சிவபாதம் (Swiss) ஆகியோரின் அன்புத்தந்தையும், சத்தியபாலசிங்கம் (U.K.), தியாகராசா (U.K.), சுகிர்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், செந்தூரன், நிமலன் (U.K.), நிசாந்தி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 5-12-88 (இன்று) திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பிட்டிவி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பொன்மலர் கணபதிப்பிள்ளை

'கணேச பவனம்'
கட்டுடை,
மானிப்பாய் (8174)

### திரு. சிவதாசன் நிர்மலன் (அண்ணா)

காங்கேசன்துறை நாகம்பனையைச் சேர்ந்த திரு சிவதாசன் நிர்மலன் (அண்ணா) அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற சிவதாசன், திருமதி லீலாவதி தம்பதிகளின் புதல்வனும் திருமதி ஜெயவாணி வேல்ராசா (ஆசிரியை, கீரிமலை, நகுலேஸ்வர ம. வி.), செல்வி தேவகி (ஆசிரியை, கனகாம்பிகைக்குளம் அவிஷ்ணு வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும், வேல்ராசா (சிறுப்பர், நீர்ப்பாசன திணைக்களம் - தலைமைப் பணிமனை - கொழும்பு) அவர்களின் மைத்துனரும், திரு வயிரவப்பிள்ளை, திருமதி மகேஸ்வரி வயிரவப்பிள்ளை தம்பதிகளின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-12-88 அன்று கீரிமலை மயானத்தில் நடைபெற்றது.

தகவல் :
திருமதி வேல்ராசா

(C/877)

### சங்கரப்பிள்ளை பொன்னையா

(பத்தர்)

அல்லாரையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வரணியில் வசித்து வந்தவருமாகிய சங்கரப்பிள்ளை பொன்னையா (பத்தர்) 4-12-88 அன்று காலமாகிவிட்டார். அன்னாரது ஈமைக்கிரியைகள் 5-12-88 திங்கட்கிழமை காலை 10மணியளவில் அவரதுமானிப்பாய் "அழகாபுரி" இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நியூ லெக்சா ஆபரண மாளிகை,
உரிமையாளர்,
க முருகையா.

"அழகாபுரி"
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய். (8172)

### திருமதி கனகபூசணம் கதிரமலைப்பிள்ளை

நல்லூர் முருகேசர் ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற P. W. D. ஓவசியர் கனகசபாபதி நாகம்மா ஆகியோரின் அன்பு மகளும், தொல்புரத்தைச் சேர்ந்த சதாசிவம் கதிரமலைப்பிள்ளையின் (கணக்காளர் கொழும்பு) அன்பு மனைவியும், ரவீந்திரன் (ஷப்ரு நிதி நிறுவனம் - கொழும்பு), திருமதி ரதனி குகனேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குகனேஸ்வரன் (ஓமான்), காலஞ்சென்ற ரஜனி (இலங்கை வங்கி) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற காராளசிங்கம், திருமதி செல்வரட்ணம், ஜெயசிங்கம், நாகராஜா (லண்டன்) தனபாலசிங்கம், ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்!

ஈமச்சடங்குகள் 5—12—88 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ச. கதிரமலைப்பிள்ளை

15/3 முருகேசர் ஒழுங்கை
நல்லூர். (8051)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 5th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org